**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ம் நாள் வெள்ளிக்கிழமை

**IA No.01/2025**

**In**

**O.S No.15/2021**

பானுமதி (இறந்தார்) மற்றும்
27 நபர்கள் ......**மனுதாரர்கள்/1 முதல் 28 வாதிகள்**

1) வள்ளி,

2) குருநாதன்,

3) சுரேஷ்,

4) சுந்தரி,

5) மித்ரா, ......**மனுதாரர்கள்/29 முதல் 33 உத்தேச வாதிகள்**

**//எதிர்//**

1) கருப்பையா செட்டியார் மற்றும் 9 நபர்கள் .....**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.சண்முகசுந்தரம் .,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1,7,8,9 பிரதிவாதிகள்/ 1,7,8,9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.R.ராம்குமார்.,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 6,10 எதிர்மனுதாரர்கள்/6,10 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ப.சிங்காரவேலு.,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் மனுதாரர்கள்/1 முதல் 28 வாதிகள் தரப்பில் கட்டளை 06 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த மனுதாரர் வழக்கின் உத்தேச 31ம் வாதி ஆவார். மற்ற வாதிகளுக்காக சேர்ந்து இந்த அபிடவிட் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நம்பர் வழக்கில் இறந்துபோன 1ம் வாதிக்கு வாரிசு சேர்க்க கொடுத்த மனு IA.386/2023 என நம்பராகி நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் இறந்துபோன 16ம் வாதிக்கு பெண் வாரிசுகள் தவறுதலாக விட்டுபோய்விட்டது. ஆகவே விட்டுப்போன பெண் வாரிசுகளான உத்தேச 32 மற்றும் 33 வாதிகளை IA.386/2023 மனுவில் சேர்த்து கொள்ள உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 10ம் எதிர்மனுதாரர்/10ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சபேனையின் சுருக்கம்:-**

மனுதாரர் 16-ம் வாதி இறந்ததற்கு வாரிசு சேர்க்க மனு செய்துள்ளார். மனுதாரர் தனது மனுவில் 16-ம் வாதியின் வாரீசாக வள்ளி-1 (16- ம் வாதியின் மனைவி), குருநாதன்-2 மற்றும் சுரேஷ்-3 (16- ம் வாதியின் மகன்கள்) ஆகியோர்களை மட்டும் வாரிசாக சேர்க்க மனுதாரர்கள் மனு செய்துள்ளார்கள். மனுதாரர் தனது மனுவில் 16-ம் வாதியின் வாரீசாக சுந்தரி மற்றும் சுமித்ரா (16-ம் வாதியின் மகள்கள்) ஆகிய பெண் வாரீசுகளை வழக்கில் தரப்பினராக சேர்க்க மனுதாரர் மனு செய்யாமல் காரணார்தமாக மனுதாரர்கள் மறைத்துள்ளார்கள். வழக்கில் (16- ம் வாதியின் பெண் வாரீசுகளை) அவசிய தரப்பினர்களை வழக்கில் வாரீசாக சேர்காமல் வழக்கு நடத்த உள்ளார். மனுதாரர் காலதாமதமாக மேற்படி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. மனுதாரர் வழக்கை தாமதம் செய்ய வேண்டும் என்பதற்காகவும், எதிர்மனுதாரரை அலக்களைவு செய்ய வேண்டும் என்கிற கெட்ட எண்ணத்துடனும் மனுதாரர் மேற்படி மனுவை தற்போது தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரரின் இந்த மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது 1 முதல் 28 வாதிகள் தரப்பில் வழக்கிடை மனு எண். 386/2023 மனு அபிடவிட்டில் பெண் வாரிசுகளை சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் எதிர்மனுதாரரை அலைக்கழிவு செய்ய வேண்டும் என்பதற்காக காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தம் தட்டச்சு திருத்தம் என்பதாலும் மேற்படி திருத்தமானது வழக்கிடை மனு எண். 386/2023 மனுவை தீர்மானிக்க அவசியமானது என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இருப்பினும் எதிர்மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தினை கருத்திற்கொண்டு இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.300/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :**

எ.ம.சா.1 - அறந்தாங்கி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.134/2023 பிராது புகைப்பட நகல்

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.09.26 18:13:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

வரைவு/செவ்வை உத்தரவு

I.A.No. 01/2025

O.S.No. 15/2021

நாள். 26.09.2025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

அறந்தாங்கி.